## சுருக்கம்

நில எடுப்பு – சென்னை மாவட்டம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், நுங்கம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.36 புல எண்கள்.617/1 ல் 720 சதுர அடியில் மகாலிங்கபுரம் சாலையை அகலப்படுத்துவது – தனியார் நிலம் ரூ.48,12,380/– செலவில் கையகப்படுத்த தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.161 நாள்: 10.08.2010

ஆடி – 25,
திருவள்ளுவர் ஆண்டு – 2041

படிக்க:

முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடித எண்.எம்2/19936/2009, நாள் 20.10.2009 மற்றும் 24.03.2010

* * * * *

**ஆணை:–**

மேலே படிக்கப்பட்ட சென்னை, முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடிதங்களில் சென்னை மாவட்டம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், நுங்கம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.36 புல எண்கள்.617/1 ல் 720 சதுர அடி நிலம் மகாலிங்கபுரம் சாலையை அகலப்படுத்துவதற்காக தனியார் நிலங்களை கையகப்படுத்த தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்கக் கோரி சென்னை மாவட்ட ஆட்சியர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார் என்றும், இந்நேர்வில் நிலஎடுப்புக்கு பரிந்துரை செய்யப்பட்ட நிலத்தை எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டாட்சியர் சென்னை மாநகராட்சி அலுவலர்களுடன் சேர்ந்து 09.07.2009 அன்று கூட்டு புலத்தணிக்கை செய்துள்ளதாகவும், இந்நில எடுப்புக்குட்பட்ட புல எண்.617/1 இல் உள்ள நிலத்தில் மரங்கள், புராதனச் சின்னங்கள் ஏதும் இல்லை என வட்டாட்சியர் தெரிவித்துள்ளதாகவும், மதில்சுவர் மட்டும் உள்ளதெனவும் தெரிவித்துள்ளார். மேலும் நிலத்திற்கான உத்தேச மதிப்பு ரூ.48,12,380/– என சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்து நிலயெடுப்பிற்கு நிர்வாக அனுமதி கோரியுள்ளார் என்றும், மேலும் நில எடுப்பு உத்தேசிக்கப்பட்டுள்ள தனியார் நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை கீழ்க்கண்டவாறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்:-

| | | |
|---|---|---|
| (i) | நில மதிப்பு ஒரு சதுர அடி ரூ.4700/– வீதம் 720 சதுர அடி நிலத்தின் மதிப்பு | ரூ.33,84,000/– |
| (ii) | சுற்றுச்சுவர் மதிப்பு (தோராயமாக) | ரூ.5,000/– |
| | மொத்தம் | ரூ.33,89,000/– |
| | 30% ஆறுதல் தொகை | ரூ.10,16,700/– |
| | 12% கூடுதல் சந்தை மதிப்பு (ஒரு வருடத்திற்கு) | ரூ.4,06,680/– |
| | ஆக மொத்தம் | ரூ.48,12,380/– |

மேலும், சென்னை மாநகராட்சி மன்றத்தின் தீர்மானம் எண்.491/2009, நாள் 31.12.2009 ல் மன்ற தீர்மானம் பெறப்பட்டுள்ளது எனவும், கையகபடுத்தப்படும் நிலங்கள் தமிழ்நாடு நகர்புற நில உச்சவரம்பு மற்றும் முறைபடுத்துதல் சட்டம் 1978 ன் கீழ் கவரப்படவில்லை எனவும் தெரிவித்து, மேற்படி மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

2. முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து சென்னை மாவட்டம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், நுங்கம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.36 புல எண்கள்.617/1 ல் 720 சதுர அடி நிலம் மகாலிங்கபுரம் சாலையை அகலப்படுத்துவதற்காக ரூ.48,12,380/– (ரூபாய் நாற்பத்தி எட்டு இலட்சத்து பணிரண்டாயிரத்து முன்னூற்று என்பது மட்டும்) செலவில் தனியார் நிலங்களை கையகப்படுத்த தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்கி இந்நில எடுப்புக்கு ஆகும் செலவினத்தை சென்னை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை வருவாய், நிதித் துறை ஆகியவற்றின் இசைவுடன் அவற்றின் அ.சா.கு.எண்.24437/நிநி2/10–1, நாள் 07.06.2010 மற்றும் 31926/ந.நி.ம.கு.வ/10, நாள் 01.07.2010 ன் படி வெளியிடப்படுகிறது.

**/ ஆளுநரின் ஆணைப்படி /**

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை – 5
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை – 1
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3

நகல்:
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், சென்னை – 9
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு வருவாய் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
வருவாய் (நி.மு.4/நி.நி.2) துறை, சென்னை – 9
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

**பிரிவு அலுவலர்**